# ஊரீசு கல்லூரி, வேலூர்
# முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை
# தேவநேயப் பாவாணர் தமிழ் மன்றம்

**முதலாமாண்டு மாணவர்களுக்கு வரவேற்பு விழா:**

4-9-2019 அன்று காலை 11.30 மணிக்கு காபு அரங்கத்தில் இளங்கலை முதலாமாண்டு மாணவர்களுக்கும், முதுகலை முதலாமாண்டு மாணவர்களுக்கும் இளங்கலை இரண்டாம் ஆண்டு மற்றும் மூன்றாம் ஆண்டு மாணவர்கள், முதுகலை இரண்டாம் ஆண்டு மாணவர்கள் இணைந்து வரவேற்பு விழா மன்றத்தின் சார்பாக நடத்தப்பட்டது. இவ்விழாவில் மாணவர்களை பேராசிரியர்கள் வாழ்த்துரை வழங்கி வரவேற்றனர்.

**தமிழ் மன்றத் தொடக்க விழா:**




16-9-2019 அன்று காலை 10.00 மணிக்கு காபு அரங்கில் தமிழ் மன்றத் தொடக்கவிழா நடத்தப்பட்டது. பேராயர் ஆட்சிமன்றக்குழு தலைவர் மற்றும் செயலர் மாமறைத்திரு H.ஷர்மா நித்தியானந்தம்

அவர்கள் தலைமையேற்று நடத்தினார். மேனாள் பொதுப்பணித்துறை அமைச்சர், காட்பாடி சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு துரைமுருகன், அரக்கோணம் பாராளுமன்ற உறுப்பினர் 'வைணவச் செம்மல்' முனைவர் சா.ஜெகத்ரட்சகன் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக கலந்துக்கொண்டு சிறப்புரை ஆற்றினர்.

வேலூர் பாராளுமன்ற உறுப்பினர் திரு.D.M.கதிர் ஆனந்த், வேலூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.பா.கார்த்திகேயன், மேனாள் மாநிலங்களவை உறுப்பினர் திரு.தி.அ.முகமதுசகி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

**மாநில மற்றும் தேசிய கருத்தரங்குகள்:**



29-10-2019 அன்று காலை 10.00 மணிக்கு காபு அரங்கில் கவிஞர் வெங்கடாசலம் அவர்களும் தமிழ்த்துறையும் இணைந்து நூல் வெளியீட்டு விழா நடத்தப்பட்டது.

7.12.2019 அன்று காலை 9.45 மணிக்கு காபு அரங்கில் "தொண்டை நாட்டில் ஒரு தமிழ்க்கூடல்" என்ற நிகழ்வில் "புலவர் அமரனின் அறவாழ்வு" என்ற தலைப்பில் புலவர் நர்மதா அமரன் சிறப்புரை ஆற்றினார்.

9.1.2020 அன்று காலை 10.00 மணிக்கு காபு அரங்கில் தமிழ்ப் பண்பாட்டு ஆய்வுமையம், பாலக்காடு மற்றும் ஊரீசு கல்லூரி

தமிழ்த்துறை இணைந்து கவித்தடம் தேசிய கருத்தரங்கம் 'வானவில் கே.ரவியின் படைப்புகள்' நிகழ்வு நடத்தப்பட்டது.

தொடக்க விழாவினை பேரருட் திரு.H.ஷர்மா நித்தியானந்தம் பேராயர் அவர்கள் தலைமை ஏற்று நடத்தினார். பாலக்காடு தமிழ்ப்பண்பாட்டு ஆய்வுமையத்தின் இயக்குனர் முனைவர் கு.அ.ராஜாராம் அவர்கள் அறிமுகவுரை ஆற்றினார். மேனாள் முதல்வர் முனைவர் இ.ஸ்டான்லி ஜோன்ஸ் கருணாகரன், மேனாள் நிதியாளுநர் த.மணிவண்ண பாண்டியன் இருவரும் வாழ்த்துரை வழங்கினர். மேனாள் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் தே.செல்லையா கருத்துரை வழங்கினார். திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் மேனாள் ஆங்கில மொழியியல் துறை பேராசிரியர் முனைவர் க.செல்லப்பன் அவர்கள் கருத்தரங்கத்தில் சிறப்புரை ஆற்றினார்.

மாலை 4.00 மணிக்கு நிறைவு விழாவில் முத்துரங்கம் கலை கல்லூரி பேராசிரியர் முனைவர் மா.இரவி, வாழ்த்துரை வழங்கினார். நிறைவுப் பேருரையாக சென்னைக் கிறித்துவக் கல்லூரியின் மேனாள் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் மோசசு மைக்கேல் பாரடே அவர்கள் உரையாற்றினார். இறுதியில் வழக்கறிஞர் மற்றும் கவிஞருமான வானவில் கே.ரவி அவர்கள் ஏற்புரை வழங்கினார்.

5.2.2020 அன்று காலை 11.00 மணியளவில் தொல்லியல் கருத்தரங்கம் கல்வெட்டு ஆய்வாளர் திரு.தமிழ்ப்புகழேந்தி அவர்களால் நடத்தப்பட்டது. கல்வெட்டு மற்றும் அகழ்வாராய்ச்சியின் பயன்களையும், பண்பாட்டுக் கூறுகளையும் மாணவர்கள் அறிந்து பயன்பெற்றனர்.